இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 68 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 31 – வியாழக்கிழமை 17 அக்டோபர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 68 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 31 - Thursday 17 October 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## அரசு மேற்கொண்ட மழைநீர் வடிகால் பணிகள் கை கொடுத்துள்ளன!

# சென்னை - புறநகர் பகுதிகளுக்கு நிரந்தரத்தீர்வு நிச்சயம் கிடைக்கும்!

## கிண்டி ரேஸ் கோர்ஸ் – பள்ளிக்கரணையில் ஆய்வு நடத்திய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

**சென்னை, அக்.17-**

**கிண்டி ரேஸ் கோர்ஸ் - பள்ளிக்கரணையில் ஆய்வு நடத்திய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டி யளிக்கையில், "அரசு மேற்கொண்ட மழை நீர் வடிகால் பணிகள் தேங்கிய மழை நீர் வடிய கை கொடுத்துள்ளன என்றும் சென்னை - புறநகர் பகுதி களுக்கு நிரந்தரத்தீர்வு நிச்சயம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.**

கிண்டி ரேஸ் கிளப் நிறுவனத்துக்கு தமிழக அரசு சார்பில் 160 புள்ளி 86 ஏக்கர் நிலம் கடந்த 1945ம் ஆண்டு முதல் 99 ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. இந்த நிலத்தின் குத்தகையை ரத்து செய்து, பூங்கா, பசுமைவெளி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. கிண்டி ரேஸ் கிளப்பில் இயங்கிய இடத்தை பசுமைப் பூங்காவாக மாற்ற அரசு முடி வெடுத்துள்ள நிலையில், நீர்நிலையுடன் கூடிய பூங்காவாக உருவாக்கினால் பெருமழை காலங்களில் அதிக அளவு நீரைச் சேமித்தை, வெள்ள பாதிப்பை தடுக்க முடியும் என்று முடிவெடுக்கப்பட்டு உள்ளது.

இதன் அடிப்படையில், கிண்டி ரேஸ் கிளப்பில் மழை நீரை சேமிக்கும் வகையில் 4 புதிய குளங்களை வெட்டும் பணியை சென்னை மாநகராட்சி தொடங்கியுள்ளது. இந்நிலையில் சென்னை ரேஸ்கோர்ஸ் மைதானத்திற்குச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிதாக அமைக்கப்படும் நீர் நிலைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2024) சென்னை, கிண்டி ரேஸ் கிளப் நிர்வாகத்திடமிருந்து மீளப்பெறப்பட்ட நிலத்தில் ஏற்கனவே உள்ள 3 குளங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணிகள் மற்றும் புதிதாக குளம் வெட்டும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் பேட்டி!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2024) சென்னையில் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்ட போது செய்தியாளர்களின் கேள்விக்கு அளித்த பதில் வருமாறு :-

**செய்தியாளர்:-** நேற்று பல இடங்களில் மழைநீர் தேங்கிய நிலையில், இன்றைக்கு எல்லா இடங்களிலும் மழைநீர் வடிந்துள்ளது. அது பற்றி....

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:-** அதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? இல்லையா? நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களே அதுவே எங்களுக்கு சந்தோஷம். இதை இன்னும் சில பேர் டிவிஸ்ட் செய்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்கள் விளக்கம் கொடுங்கள்

**செய்தியாளர்:-** மழைநீர் பணிகள் அரசுக்கு கை கொடுத்திருக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**மு.க.ஸ்டாலின்:** நிச்சயமாக, உறுதியாக நம்புகிறேன். நீங்களே மக்களிடம் சென்று கேளுங்கள். அவர்கள் சொல்வார்கள். நாங்கள் சொல்வதைவிட அவர்களிடம் சென்று கேட்டால் தான் சரியாகத் தெரியும். உண்மை புலப்படும்.

**செய்தியாளர்:-** தற்போது 20 செ.மீ.க்கு மேல் மழை பெய்திருக்கும் சூழ்நிலையில் மேலும் மழை வரும்... அது பற்றி........

**மு.க.ஸ்டாலின்:** – நாங்கள் ஏற்கனவே 3 மாதங்களாக இதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டு வருகிறோம். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் நாங்கள் குழு அமைத்து, நான் ஆட்சியில் வந்தவுடனே அதற்கான பணிகளில் இறங்கினோம். இப்போது, அப்பணிகளை படிப்படியாக செய்து கொண்டுவருகிறோம். இன்னும் 20 முதல் 30 சதவிகிதம் பணிகள் மீதம் உள்ளது. அதையும் வரக்கூடிய காலக் கட்டத்தில் முடித்துவிடுவோம். அதனால், சென்னை மக்களுக்கும், சென்னையை ஒட்டியுள்ள புறநகர் பகுதி மக்களுக்கும் நிரந்தரமான தீர்வு நிச்சயமாக கிடைக்கும்.

**செய்தியாளர்:-** அரசு அதிகாரிகளுக்கும், தூய்மைப் பணியாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி என்னவாக இருக்கிறது?

**மு.க.ஸ்டாலின்:** தூய்மைப் பணியாளர்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், மாநகராட்சி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் இப்பணியில் முழு மூச்சாக ஈடுபட்டு சிறப்பாக செய்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும், யார் யார் இப்பணியில் ஈடுபட்டு இதில் வெற்றி கண்டிருக்கிறார்களோ, அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் சென்னை மாநகர மக்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

## கிண்டி – வேளச்சேரி உள்ளிட்ட தென் சென்னை பகுதிகளில் நடைபெறும் பணிகளை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

**சென்னை, அக். 17-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2024) சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில், சென்னை, கிண்டி ரேஸ் கிளப் பகுதி, வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கால் ஓடை மற்றும் நாராயணபுரம் ஏரி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

### கிண்டி ரேஸ் கிளப் பகுதி

சென்னை, கிண்டி ரேஸ் கிளப் நிர்வாகத்திற்கு அரசால் குத்தகைக்கு வழங்கப்பட்ட 160.86 ஏக்கர் நிலம் மீளப்பெறப்பட்டு, அந்நிலத்தில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மிகச் சிறந்த பூங்கா, பசுமை வெளி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் உருவாக்கம் செய்திட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மேலும், கிண்டி ரேஸ் கிளப் நிர்வாகத்திடமிருந்து மீளப்பெறப்பட்ட அந்நிலத்தில் ஏற்கனவே உள்ள 3 குளங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணிகள் மற்றும் புதிதாக 4.24 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட 4 குளங்கள் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த குளங்கள் வெட்டப்படுவதன் மூலம் பிள்ளையார் கோயில் தெரு, மடுவாங்கரை, ஐந்து பர்லாங் சாலை, வண்டிகாரன் தெரு, ரேஸ் கிளப் உட்புறச் சாலை, வேளச்சேரி பிரதான சாலை ஆகிய பகுதிகளுக்கு செல்லும் கிண்டி ரேஸ் கிளப் மழைநீர், மேற்காணும் பகுதிகளுக்கு செல்லாமல் இக்குளங்களிலேயே தேக்கி வைக்கப்படும். இதன்மூலம், அப்பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுவதோடு, போக்குவரத்திற்கு பாதிப்பில்லாமல், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படாமலும் இருக்கும். அத்துடன் அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் கிண்டியில் நடைபெற்று வரும் அக்குளங்களை வெட்டும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

### வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கல் ஓடை

வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கால் ஓடையின் நீரானது பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் வழியாக பக்கிங்ஹாம் கால்வாய்க்கு சென்று, பின்னர் கடலுக்கு சென்றடையும். வீராங்கல் ஓடை பொதுப்பணித் துறையின் மூலமாக தற்போது தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது.

வீராங்கால் ஓடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

### நாராயணபுரம் ஏரி

நீர்வளத்துறை மூலம் நாராயணபுரம் ஏரிக்கரையினை பலப்படுத்தும் பணிகளும், நீர் ஒழுங்கியினை சீரமைப்பு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

இன்று அதிகாலை 2 பொக்லைன், 10 லாரிகளைக் கொண்டு கரையினை பலப்படுத்தும் பணி மற்றும் ஏரியின் நீர் ஒழுங்கியினை பொக்லைன், JCB இயந்திரங்கள் கொண்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், கீழ்க்கட்டளை ஏரியின் உபரி நீர் கால்வாய் பாலத்தில் மிதக்கும் தாவரங்கள் மற்றும் குப்பைகளை பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றும் பணி மற்றும் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மணல் மேட்டினை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் நாராயணபுரம் ஏரியில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள் மற்றும் ஏரிக்கரையினை பலப்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, மேற்காணும் பணிகள் அனைத்தையும் இன்று மாலைக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வடகிழக்குப் பருவமழையையொட்டி எடுக்கப்பட்டுள்ள மீட்பு நடவடிக்கைகள் பற்றி விவரங்கள்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 131 மி.மீ. மழை பெய்துள்ளது. மழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாய்ந்த 67 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மையத்திலும் 200 நபர்கள் வரை தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை தாழ்வான பகுதிகளில் இருந்து 1360 நபர்கள் அழைத்து வரப்பட்டு 36 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 98 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. நேற்று முன்தினம் (15.10.2024) காலை உணவு 1000 நபர்களுக்கும், மதிய உணவு 45,250 நபர்களுக்கும், இரவு உணவு 2,71,685 நபர்களுக்கும் வழங்கப்பட்டதோடு, நேற்று (16.10.2024) காலை உணவு 4,16,000 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 388 அம்மா உணவகங்களில் நேற்றும் (16.10.2024), இன்றும் (17.10.2024) பொதுமக்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படும்.

சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் போக்குவரத்து சீராக உள்ளது. நீர்தேங்கியுள்ள 542 இடங்களில் 412 இடங்களில் மழைநீர் அகற்றப்பட்டுள்ளததோடு, மீதமுள்ள இடங்களிலும் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,223 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறைக்கு 6120 அழைப்புகள் வந்துள்ளன. இதன்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநில பேரிடர் மீட்புக்குழு மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சார்ந்த 8 குழுவினர் தயாநிலையில் உள்ளனர். தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மணலி, எழும்பூர், செனாய் நகர் மற்றும் பள்ளிக்கரணையிலும், மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் செனாய் நகர்2, வில்லிவாக்கம் மற்றும் ராஜரத்தினம் அரங்கத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாநில பேரிடர் மீட்புக்குழுவைச் சார்ந்த 80 வீரர்கள், தேசிய பேரிடர் மீட்புக்குழுவைச் சார்ந்த 100 வீரர்கள், மீட்புப் படகு, இயந்திர ரம்பம், ஸ்டெக்சர் உள்ளிட்ட மீட்பு கருவிகளுடனும், சென்னையில் 103 படகுகளுடனும் மீட்புப் பணிக்கு தயார் நிலையில் உள்ளனர்.

மழைக்காலத்தினை முன்னிட்டு, பொது சுகாதாரத்துறையின் சார்பில் சென்னையில் மட்டும் நாள்தோறும் 100 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் கழிவுநீர் அகற்றும் பணிக்காக சென்னை குடிநீர் வாரியத்தின் 73 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், மற்ற மாநகராட்சி / நகராட்சி / மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட 89 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், பாதாள சாக்கடைகளில் அடைப்புகளை சீர் செய்வதற்கு 524 ஜெட்ராடிங் மற்றும் டீசில்டிங் இயந்திரங்கள் பணியில் ஈடுபட்டுள்ளன.

மேலும், சீரான குடிநீர் வழங்குவதற்கு நாள்தோறும் இயக்கப்படும் 453 லாரிகளுடன், கூடுதலாக 36 லாரிகள் இயக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், அசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.